உ

சிவமயம்

# சனீஸ்வர வழிபாடு

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

முரசொலி - ரெலிகுளோப்

இலவச வெளியீடு

புரட்டாசி, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனீஸ்வர வழிபாடு

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய நவக்கிரகங்களெனும் நவ நாயகர்களும் நம்மீதும், உலகத்து ஏனைய எல்லா உயிர்கள் மீதும் ஆட்சி செலுத்திய வண்ணமிருக்கின்றனர். இவர்களுள் சனி பகவானுலேயே தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக இன்றைய உலகில் பெரும்பாலோர் கருதுகின்றனர்.

சனிபகவானின் தந்தை சூரியன் எனவும், தாய் சாயா தேவி எனவும் இவருடைய சகோதரர்களுள்ளே சிறப்புவாய்ந்தவர் யமன் எனவும், வாகனம் காகம் எனவும் நூல்களால் அறியக் கூடியதாக உள்ளது. சிலநூல்களிலே கழுகும் சனி பகவானது வாகனமெனக் கூறப்பட்டுள்ளது. எள்ளும், கரும்பும், நீலநிறமணிகளும், இரும்பு உலோகமும், நீலநிறப்பூவும், எள்ளெண்ணெய்யும் சனி பகவானுக்கு உவப்பான நிவேதனப் பொருட்களாம். நீலநிற, கரிய நிற துணிகளும் இவற்றுள் அடங்கும்.

பன்னிரு இராசிகளுள் மகரம், கும்பம் ஆகிய இரண்டு இராசிகளுக்கும் சனிபகவான் அதிபதியாக விளங்குகின்றார்.

தீவினைப்பயன்களைக் கொடுப்பதில் சனிபகவானே முதன்மையானவர் என்றவோர் அச்சம் இன்றைய மக்களிடையே பரவலாக நிலவி வருகின்றது. உண்மையில் அவரவர் வினைகளுக்கேற்ப எல்லாக் கிரகங்களுமே தீவினைப்பயனைக் கொடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு கிரகமும் தமக்கென வகுக்கப்பட்ட தீவினைப்பயன்களை அவரவர்க்கு வழங்கும் நியதியை உடையன.

சனிபகவான் இயல்பாகவே இரக்க சுபாவம் பொருந்தியவர், ஒருவர்செய்த தீவினையிலிருந்து அவரை விடுவிக்கும் நோக்குடனே பகவான் செயற்படுவதாகவே நூல்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியக்கூடியதாக உள்ளது. தாய் நோயுற்ற குழந்தைக்குக் கசப்பு மருந்தை வலியுறுத்திக்கொடுப்பது போன்றதன்மையையே இது ஒத்ததென்பர் ஆன்றோர்.

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அடிப்படைக்காரணி நாம் செய்த தீவினைகளேயாகும். இறைவனின் ஆணைக்கு அடங்கிச் செயற்படும் நிர்வாகப் பொறுப்புடையனவே நவக்கிரகங்கள். எந்தக் கிரகங்களும் தன்னிச்சைப்படி இயங்குவதில்லை என்பது தெளிவு. நாம் சனிபகவான்மீதோ, ஏனைய கிரகங்களிலோ பழிபோட்டு வெறுப்பது எய்தவனிருக்க அம்பைநோவது போன்ற செயலாகும்.

கிரகசாந்தி, சனிபகவானை வழிபடுதல் என்பன நாம்செய்த தீவினைகளுக்கு மன்னிப்புக்கோரும் செயல்களேயாகும். நாம் செய்த் தீமையின் பயன் எம்மிடம் வந்து பொருந்துவதை பொருத்தவிருப்பதை நம் அனுபவத்திலே காண்பதிலிருந்தே அவரவர் தீவினைப்பயன் தான் அவரவர்க்குத் துன்பமாக வருகிறது என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். பின்னர் நாம் மன்னிப்புக் கோரிய உடனே, எம்மன்னிப்பு அங்கீகரிக்கப்பட்டு, எமக்கு வந்த, வரவிருந்த துன்பம் முற்றுமுழுதாக நீங்கப்படும் என்று கருதலாகாது. சாந்திவழிபாடுகளால் துன்பங்களின் கடுமை குறையும், சில நீங்கும்.

சிரத்தையுடனும் முறைப்படியும் செய்யும் வழிபாடு சாந்தி என்பன துன்பங்களைப் பெருமளவு குறைக்குமென்பது நமது விவேகத்தால் உணர முடியாத உண்மைகளைக் கூறும் நூல்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

கிரகசாந்தி செய்வோர் கவனிக்கவேண்டிய நியதிகள் பலவுள. கிரகசாந்தி செய்யத் தொடங்குமுன் நல்லொழுக்கங்களை மேற்கொள்வதுடன் கிரகசாந்தி கருமங்களுக்குப் பயன்படுத்தப்படும் பொருள், பணவருவாய் என்பனவும் தூய்மையானவையாக இருக்கவேண்டும். தொழிலாளிக்கோ கூலிக்காரனுக்கோ கொடுக்கவேண்டிய ஊதியத்தை வஞ்சித்து எடுத்த அப்பணத்தாலோ அல்லது இரக்கமற்ற முறையில் வட்டி வாங்குதல், கொலை முதலிய பாவவழிகளில் தேடிய பணத்தாலோ சாந்தி செய்தல், சனிபகவானைப் பிரீதி செய்தல் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன விரும்பும் நன்மையைப்புரியாது. இதேபோல் கிரகசாந்தி யைச் செய்துவைக்கின்ற குரு, மந்திரசித்தி, நல்லொழுக்கம் சாஸ்திர நுட்பம், கிரகசாந்தி செய்பவர்மீது இரக்கம், தாம் செய்யும் கிரியைகள் பலனளிக்கும் விரைவு — தன்மை முதலிய வற்றை உடையவர்களாயிருப்பது அவசியம்.

வறுமை, வழக்குத்தொல்லை, விரும்பியவர்களைப் பிரிதல், முன்னேற்றத்தடை, துக்கம், வலியின்மை, வாதம் தொடர் பான வியாதிகள், கைகால் ஒச்சல், நோயினல் உறுப்புக்கள் அழுகுதல், அசதி, நண்பர் அயலவர்களுக்கிடையே கருத்து வேற்றுமை, மனக்கசப்பு அரசினலும், அதிகாரிகளாலும் தண் டிக்கப்படுதல் முதலிய துன்பங்கள் ஏற்படும்போது இவை சனி பகவானல் உண்டாக வல்லன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இவற்றுக்குத் தகுந்த விரதம், அநுஷ் டானம், ஒழுக்கம் என்பனவற்றல் பகவானது அநுக்கிரகத்தை பெறுவதன் மூலம் அவற்றின் தாக்கத்தால் பாதிக்கப்படுவ திலிருந்து அவற்றைத் தாங்கிக்கொள்ளும் சகிப்புத் தன்மை யையும், ஆற்றலையும் பெற்றுக் கொள்ள முடியும்.

சனிபகவானது அநுக்கிரகத்தினலேயே உத்தியோகத்தில் பதவி உயர்வு, விவசாயவிருத்தி, தொழில் முன்னேற்றம் வருவாய் உயர்வு ஆகியன கைவரப் பெறுகின்றன. ஆனல் சனிபகவானின் கருணையால் கிடைக்கும் இத்தகைய மேம் பாடுகள் பிறரால் மதிக்கப்படத் தக்கதாக இருப்பதோடு பெருமைப்படத் தக்கனவாகவும் அமையும். பொறாமைப்படத் தக்கதாக ஒருபோதுமே அமையா.

இரும்பு சம்பந்தமான இயந்திரங்களைப் பயன்படுத்தும் தொழில்கள், எண்ணெய் தொடர்பான தொழில்கள், காரி யம், உழுந்து ஆதிய தொடர்பாகச் செய்யுந் தொழில்கள் சனிபகவானது திருவருள் நோக்கினல் விருத்தியடைவன. இவை தொடர்பான உயர்வுகளையும், மேம்பாடுகளையும் தன் யோகக் காரர்களுக்குச் சனிபகவான் வழங்குவார். "சனி பகவானைப்போல் கொடுப்பாருமில்லை; சனிபகவானைப்போல் கெடுப்பாருமில்லை" என்பது ஒரு அநுபவ வாக்கியமாகும்.

சூரியவழிபாடு, சனிபகவான் வழிபாடு, விரதமாகியவற் றினலே பூரண பயனைப்பெற விரும்புவோர் இவற்றுடன் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய தெய்வங்களாகிய சிவ, விஷ்ணு வழிபாடுகளேயும், விரத அநுஷ்டானங்களேயும் மேற்கொள்வதவசியமாகும். இதே போன்று இராகு தோஷமுள்ளோர் துர்க்காதேவியையும், செவ்வாய் தோஷமுள்ளோர் முருகனேயும் சிறப்பாக வழிபட வேண்டுமென்பர் சான்றோர்.

தமிழ் நாட்டிலே திருநள்ளாறு என்னும் சிவஸ்தலம் சனிக்கிரகதோஷ நீக்கத்துக்குகந்த வழிபாட்டுத் திருத்தல மாக விளங்குகின்றது. நளமகாராஜன் சனிக்கிரக தோஷத் திலிருந்து விடுபட வழிபட்டு அருள்பெற்ற திருத்தலமும் திரு நள்ளாறே. ஈழத்திலே சுழிபுரம் பொன்னுலே வரதராஜப் பெரு மாள் கோவிலும், வண்ணே வரதராஜப் பெருமாள் கோவி லும், பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலும் தனித்துவம் பெற்ற அருள் நிறை தலங்களாக விளங்குகின்றன.

கிரக வழிபாட்டில் சிறப்பித்துக் கூறப்படுவது தானம் கொடுத்தலேயாகும். இத்தானத்தைத் தகுதியறிந்து கொடுப் பதாலேயே அதன் பயன்பாடும் அமையும் என்பர் நூலறி ஞர். எனவே கொடுக்கப்பட்ட தானத்தைப் பேணக் கூடிய வர்களைத் தேடி அறிந்து கொடுத்தல் நன்று. சனிபகவான் வழிபாட்டில் கறுப்புத்துணி, எள்ளு, எண்ணெய், இரும்புச் சட்டி என்பனவற்றைத் தானம் செய்யவேண்டும்.

ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும் சனிபகவான் எவ் வாறு இடம் பெற்றிருக்கின்ருரோ அவ்வாறே ஒவ்வொரு வரது உடலமைப்பிலும் சனிபகவானுக்கெனச் சில அங்கங் கள் உண்டு. இதற்கு கையிலே 'சனிமேடு' என ரேகை சாஸ் திர நிபுணர்கள் குறிப்பிடுவது நக்கதோர் சான்ருகும்.

சனிபகவானே; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென நினைத்து வழிபடுதலே நல்ல பலனைக் கொடுக்கும் என்பது புராண இதிகாசங்களிலுலே பெறப்பட்ட உண்மையாகும். எனவே சனிபகவான் வழிபாட்டுடன் கண்கண்ட தெய்வங்க ளாகிய தாய், தந்தை, குரு, பெரியோர் முதலியோரையும் மதித்து வழிபட்டு ஒழுக்க நெறி நின்று யாவருமே உய்தி பெறுவோமாக.

✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிபகவான் துதி

யோகமே பயின்று நாளு
முள்ளுகந் திடுவாய் போற்றி
போகமுற் றகன்ற ஞான
முதன்மைமுற் றுடையாய் போற்றி
வேதமுற் றகலவாட்டி
வெம்பொறி வலியடக்கும்
வாகமர் காசிபன் செய்
மாதவப் புதல்வ போற்றி.

திரைய கலா திலங்குந்
திருமுகத் தேவே போற்றி
நிரைபடு கதிரோனுள்ள
நெகிழ்விக்கு மதலை போற்றி
தரைவரு முயிருக் கச்சந்
தரும் பெருந் தலைவ போற்றி
புரைபடுகிழ் நோக்கோடு
பொலிவிழிப் புனித போற்றி.

உள்ள நீ மகிழ் தியாகி
ஒல்கரசாளச் செய்வாய்
வள்ளளே வெகுளுவாயேன்
மண்ணவ ரசுரர் தேவர்
நன்னுசீர்ச் சித்தர்மற்று
நவிற்றுகந்த ருவர்நாகர்
விள்ளருந் துன்பமூழ்க
மீட்டது கவர்வாய் மேலோய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு ஆண்டொன்று பூர்த்தியாகு முன்னரே

# முரசொலி

- முக்கிய செய்திகளை முந்தித் தருவதில்
- பத்திரிகைத் தரத்தில்
- அச்சுப்பதிவு அமைப்பில்
- வாசகர் தொகையில்
- விற்பனையில்

**முன்னணியில் நின்று**

**வெற்றிமுரசு கொட்டுகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org